**தேர்வைத் துவங்கும் முன்னர், Announcement – 24 - ஐ ஒரு முறை முழுவதுமாகப் படித்துவிடுங்கள்.**

**All the Best!!!**

1) புறநானூற்றின் இறுதிப்பாடலான, “பலர் துஞ்சவும் தான் துஞ்சான் / உலகு காக்கும் உயர் கொள்கை / கேட்டோன், எந்தை என் தெண்கிணைக் குரலே” என்ற பாடலின் மூலம், இரவின் கடையாமத்தில் உறங்காமல் விழித்திருந்த சோழன் நலங்கிள்ளியை வியந்து பாடுபவர் யார்?

A) அரிசில் கிழார் B) கோவூர் கிழார் C) ஆவூர் கிழார் D) ஆலந்தூர் கிழார்

2) உரோமாபுரிச் சிப்பாய்கள் பாண்டியப் போர்ப்படையில் இடம் பெற்றிருந்தார்கள் என்ற குறிப்பு எந்த நூலில் உள்ளது?

A) பட்டினப்பாலை B) சிலப்பதிகாரம் C) குறுந்தொகை D) ஐங்குறுநூறு

3) “கல்லாரே யாயினும் கற்றாரைச் சேர்ந்தொழுகின் / நல்லறிவு நாளுந் தலைப்படுவர் - தொல்சிறப்பின் ஒண்ணிறப் பாதிரிப்பூச் சேர்ந்தலாற் புத்தோடு / தண்ணீர்க்குத் தான்பயந் தாங்கு" என்று இயம்பும் நூல்?

A) ஏலாதி B) திரிகடுகம் C) சிறுபஞ்சமூலம் D) நாலடியார்

4) 1995ஆம் ஆண்டில் தமிழ் வளர்ச்சித் துறையின் சிறந்த நூலுக்கான பரிசை வென்ற இறையன்பு அவர்களின் கவிதை நூல் எது?

A) ஏழாவது அறிவு
B) வாய்க்கால் மீன்கள்
C) உள்ளொளிப் பயணம்
D) மூளைக்குள் சுற்றுலா

5) 'பாரத மக்களின் பரிதாபச் சிந்து' என்ற "தேயிலை தோட்டப் பாட்டு" என்னும் நூலை இயற்றியவர் யார்?

A) தோப்பில் முகமது மீரான்
B) நாகூர் ரூமி
C) வைக்கம் முகமது பஷீர்
D) முகம்மது இராவுத்தர்

6) புக்க - இலக்கணக்குறிப்பு தருக:

A) வினையெச்சம்
B) பெயரெச்சம்
C) வினைமுற்று
D) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

7) இந்நூல்,

1. பண்டைத் தமிழகத்தின் அரசியல், சமூக வரலாற்றை விளக்கும் அரிய கருத்துக் கருவூலமாகத் திகழ்கிறது.
2. முடியுடை மூவேந்தர், குறுநில மன்னர், வேளீர் முதலிய சிறப்புடை மக்கள், போர்ச்செய்திகள், கையறுநிலை, நடுகல் போன்ற பல்வேறு பொருண்மைகளை வெளிப்படுத்துகிறது.

A) சிலப்பதிகாரம்
B) புறப்பொருள் வெண்பா மாலை
C) தொல்காப்பியம்
D) புறநானூறு

8) பிசிராந்தையார் காலத்தில் பாண்டிய நாட்டை ஆண்ட மன்னன்?

A) ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்
B) அரிகேசரி மாறவர்மன்
C) பொற்கை பாண்டியன்
D) அறிவுடை நம்பி

9) புகளூர் ஆற்றுநாட்டான் குன்று கல்வெட்டு எக்காலத்தைச் சேர்ந்தது?

A) 6ம் நூற்றாண்டு B) 7ம் நூற்றாண்டு C) 8ம் நூற்றாண்டு D) 9ம் நூற்றாண்டு

ETW ACADEMY

10) தொன்மம் என்றால் என்ன?

A) பழங்கதை அல்லது புராணம்
B) உண்மை அல்லது வரலாறு
C) பழங்கதை அல்லது வரலாறு
D) உண்மை அல்லது புராணம்

11) 'சாபவிமோசனம்', 'அகலிகை' கதைகளில் இராமயணத்தின் அகலிகை தொன்மங்களைப் பயன்படுத்தியவர்

A) கு. அழகிரிசாமி
B) புதுமைப்பித்தன்
C) ஜெயமோகன்
D) எஸ்.ராமகிருஷ்ணன்

12) யானை சினங்கொண்டு பேராற்றலுடன் போர்செய்த சிறப்பினை, முருகனின் வீரத்தோடு இணைத்துக் கூறும், "முருகு உறழ் முன்பொடு / கடுஞ்சினம் செருக்கிப் பொருத யானை" என்றப் பாடல் இடம்பெறும் நூல் எது?

A) குறுந்தொகை
B) நற்றிணை
C) கலித்தொகை
D) அகநானூறு

13) "பூமிச்சருகாம் பாலையை / முத்துபூத்த கடல்களாக்குவேன் / புயலைக் கூறுபடுத்தியே - கோடிப் / புதிய தென்றலாக்குவேன் / இரவில் விண்மீன் காசினை - செலுத்தி / இரவலரோடு பேசுவேன்! / இரவெரிக்கும் பரிதியை - ஏழை / விறகெரிக்க வீசுவேன்" என்று பாடியவர்?

A) சுரதா
B) நா.காமராசன்
C) வாணிதாசன்
D) இன்குலாப்

14) சங்ககாலப் பசும்பூண் பண்டியன் தன் கொடியில் யானைச் சின்னத்தைக் கொண்டிருந்தான் என்ற செய்தி அகநானூறு நூலில் இருப்பதை முதன்முதலில் அறிந்து வெளிப்படுத்தியவர்?

A) மயிலை சீனி. வேங்கடசாமி
B) நாவலர் சோமசுந்தர பாரதியார்
C) வ.சு.ப.மாணிக்கம்
D) மா.இராசமாணிக்கனார்

15) பின்வரும் எது மயிலை சீனி வேங்கடசாமியின் நூல் அல்ல?

A) சைவமும் தமிழும்
B) கிறித்துவமும் தமிழும்
C) பௌத்தமும் தமிழும்
D) சமனமும் தமிழும்

16) கவின்கலைகள் குறித்துத் தமிழில் வெளிவந்த முழுமையான முதல்நூலை மயிலை சீனி.வேங்கடசாமி எழுதினார். அந்நூலின் பெயர்?

A) தமிழர் காத்த அழகுக்கலைகள்
B) தமிழர் வியந்த அழகுக்கலைகள்
C) தமிழர் வளர்த்த அழகுக்கலைகள்
D) தமிழர் போற்றிய அழகுக்கலைகள்

17) மயிலை சீனி வேங்கடசாமியின், "தமிழர் வளர்த்த அழகுக்கலைகள்" என்ற நூல் பெற்ற பரிசு?

A) சாகித்ய அகாதமி
B) விளக்கு விருது
C) எழுத்தாளர் கூட்டமைப்பு விருது
D) தமிழக அரசின் முதற்பரிசு

18) "தாங்கெட நேர்ந்த போதும் / தமிழ்கெட லாற்றா அண்ணல் / வேங்கட சாமி என்பேன் / விரிபெரு தமிழர் மேன்மை / ஓங்கிடச் செய்வ தொன்றே / உயிர்ப்பணியாகக் கொண்டோன் / வீங்கிட மாட்டான் கல்வி / விளம்பரம் விழைதல் இல்லான்" என்று பாடியவர் யார்?

A) பாரதியார்
B) பாரதிதாசன்
C) வாணிதாசன்
D) சுரதா

ETW ACADEMY

19) மயிலை வேங்கடசாமிக்கு "தமிழ்ப் பேரவைச் செம்மல்" என்ற விருதினை அளித்த பல்கலைக்கழகம்?

A) திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகம்
B) சேலம் பெரியார் பல்கலைக்கழகம்
C) வேலூர் திருவள்ளுவர் பல்கலைக்கழகம்
D) மதுரை காமராசர் பலகலைக்கழகம்

20) "பாதகர் குழுமிச் சொற்ற பழிப்புரை என்னும் கொள்ளி / ஏதமில் கருணைப் பெம்மான் இருதயத்து ஊன்ற ஊன்ற / வேதனை உழந்து சிந்தை வெந்து புண்பட்டார் அல்லால் / நோதகச் சினந்தோர் மாற்ற நுவன்றிலர் கரும நோக்கி" என்ற இரட்சணிய யாத்திரிகப் பாடலை இயற்றியவர்?

A) வீரமாமுனிவர்
B) கண்ணதாசன்
C) எச்.ஏ. கிருட்டிணனார்
D) ஜி.யு.போப்

21) பொருந்தாப் பொருள் எது?

A) உன்னலிர் - எண்ணாதீர்கள்
B) பிணித்தமை - கட்டியமை
C) நீச - மேன்மையான
D) நேசம் - அன்பு

22) சொற்ற, திருந்திய - இலக்கணக்குறிப்பு தருக

A) பெயரெச்சங்கள்
B) வினையெச்சங்கள்
C) தொழிற்பெயர்கள்
D) வினைமுற்றுகள்

23) பாதகர் - இலக்கணக்குறிப்பு அறிக

A) வினைமுற்று
B) வினையெச்சம்
C) வினைத்தொகை
D) வினையாலனையும் பெயர்

24) திருநெல்வேலியில் இருந்து வெளிவந்த 'நற்போதகம்' எனும் ஆன்மீக மாத இதழில் இரட்சணிய யாத்திரிகம், எத்தனை ஆண்டுகள் தொடராக வெளிவந்தது?

A) 8
B) 13
C) 10
D) 9

25) எச்.ஏ. கிருட்டிணனார் இயற்றிய நூல் அல்லாது எது?

A) இரட்சணிய யாத்திரிகம்
B) போற்றித் திருஅகவல்
C) இரட்சணிய மனோகரம்
D) தேம்பாவணி

26) "......... என ஆங்கு / எழுசமங் கடந்த எழு உறழ் திணிதோள் / எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம் / விரிகடல் வேலி வியலகம் விளங்க / ஒருதான் தாங்கிய உரனுடை நோன்தாள்" என்ற சிறுபாணாற்றுப்படை பாடலை பாடியவர் மற்றும் பாடப்பட்டவர் முறையே?

A) காரியாசான், பேகன்
B) நத்தத்தனார், நல்லியக்கோடன்
C) முன்றுறை அரையனார், நலங்கிள்ளி
D) கணிமேதாவியார், குமணன்

27) உலகம் வியக்கும்படி வெண்மையான பிடரியுடன் தலையை ஆட்டும் குதிரைகளையும் ஏனைய செல்வங்களையும் இனிய மொழிகளுடன் இரவலர்க்கு இல்லையென்னாமல் கொடுப்பவன் யாரென நல்லூர் நத்தத்தனார் பாடுகிறார்?

A) காரி
B) ஓரி
C) ஆய்
D) பாரி

ETW ACADEMY

28) கடையேழு வள்ளல்கள் ஈகை என்னும் பாரத்தை ஒன்று சேர்ந்து இழுத்துச் சென்றனர்; ஆனால், தானே தனியொருவனாக இருந்து அந்த ஈகையின் பாரத்தை தாங்கி இழுத்துச் செல்லும் வலிமை உடையவன் யாரென நல்லூர் நத்தத்தனார் பாடுகிறார்?

A) நல்லியக்கோடன் B) குமணன் C) திருமுடிக்காரி D) ஆய் அண்டிரன்

29) தன்னை நாடிப் பரிசில் பெற வந்த பெருந்தலைச் சாத்தனார் எனும் புலவர்க்குக் கொடுப்பதற்குத் தன்னிடம் பொருள் இல்லாமையால், தன் இடையிலுள்ள உறைவாளைத் தந்து, "தன் தலையை அரிந்து சென்று, இளங்குமணனிடம் கொடுத்துப் பரிசில் பெற்றுச் செல்லுமாறு" கேட்டுக் கொண்ட வள்ளல்?

A) நந்திவர்மன் B) பேகன் C) நல்லியக்கோடன் D) குமணன்

30) பொருத்துக:

அ) கலிங்கம் - 1) சிவபெருமான் (இறைவன்)
ஆ) மால்வரை - 2) சிறு குன்று
இ) குறும்பொறை - 3) ஆடை
ஈ) கோடியர் - 4) பெரியமலை (கரிய மலையுமாம்)
உ) ஆலமர் செல்வன் - 5) கூத்தர்

A) 5 4 2 3 1 B) 3 4 2 5 1 C) 2 4 5 3 1 D) 5 4 3 2 1

31) அரவக்கடல் - இலக்கணக்குறிப்பு தருக

A) இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை
B) மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை
C) நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை
D) ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

32) சிறுபாணாற்றுப்படையின் பாட்டுடைத்தலைவன்?

A) பேகன் B) ஆய் அண்டிரன் C) குமணன் D) நல்லியக்கோடன்

33) சிறுபாணாற்றுப்படையை நல்லூர் நத்தத்தனார் எத்தனை அடிகளில் இயற்றியுள்ளார்?

A) 269 அடிகள் B) 255 அடிகள் C) 133 அடிகள் D) 288 அடிகள்

34) கோடைமழை என்ற சிறுகதை ____ அமைப்பின் சிறந்த சிறுகதைக்கான விருதைப் பெற்றுள்ளது

A) விளக்கு
B) புதிய சிந்தனையாளர்கள்
C) விஷ்ணுபுரம்
D) இலக்கியச் சிந்தனை

35) தமிழின் செல்வாக்கினாலேயே வடமொழியில் குறிப்புப் பொருள் கோட்பாடு உருவானது என்று குறிப்பிடுபவர்?

A) கால்டுவெல் B) ஜி.யு.போப்
C) ஹார்ட் D) எல்லீஸ்

ETW ACADEMY

36) சிறுபாணாற்றுப்படை காட்டும் பாட்டுடைத்தலைவனின் இன்றைய நிலப்பகுதி

A) உதகமண்டலம் B) விழுப்புரம் C) திண்டிவனம் D) தர்மபுரி

37) பொருந்தாத ஒன்றைக் கண்டறிக.

A) தனித்தமிழ்த் தந்தை - மு. வரதராசனார் B) ஆராய்ச்சிப் பேரறிஞர் - மயிலை சீனி. வேங்கடசாமி

C) தமிழ்த் தென்றல் - திரு.வி.க. D) மொழி ஞாயிறு - தேவநேயப் பாவாணர்

38) தமிழக அரசு வ.சு.ப. மாணிக்கம் அவர்களின் மறைவிற்குப் பிறகு, அவருக்கு எவ்விருது அளித்தது?

A) பாரதியார் விருது B) இளங்கோவடிகள் விருது

C) பெரியார் விருது D) திருவள்ளுவர் விருது

39) தமிழக அரசு வ.சு.ப. மாணிக்கம் அவர்களின் நூல்களை நாட்டுடைமை ஆக்கிய ஆண்டு?

A) 2006 B) 2004 C) 2002 D) 2000

40) தென்னிந்தியாவின் நுழைவாயில்?

A) சென்னை B) சிரவணபெலகொலா C) ஹைதராபாத் D) தூத்துக்குடி

41) மனித நாகரிகத்தின் முதன்மையான களங்களில் ஒன்றாக விளங்கிய சென்னையைச்சேர்ந்த பழமையான ஆற்றுப்படுகை எது?

A) கூவமாற்றுப் படுகை B) பாலாற்றுப் படுகை

C) வெற்றாற்றுப் படுகை D) கொற்றலையாற்றுப் படுகை

42) விஜய நகர ஆட்சியின் உள்ளூர் ஆளுநர்களான சென்னப்பரின் மகன்களிடமிருந்து 2.08.1639 இல் மயிலாப்பூர் குப்பங்களை வாங்கிய ஆங்கிலேயர்?

A) எ்ப். டபுல்யூ எல்லீஸ் B) குரோஸ்த்வைட்

C) பிரான்சிஸ் டே D) வில்லியம் ஜோன்ஸ்

43) கருப்பர் நகரம், வெள்ளையர் நகரம் இவ்விரு பகுதிகள் இணைந்த பகுதி எவ்வாறு அழைக்கப்பட்டது?

A) துறைமுகப் பட்டினம் B) கிழக்கிந்தியப் பட்டினம்

C) மதாராசப் பட்டினம் D) சென்னைப் பட்டினம்

44) யார் தலைமையிலிலான காலம், சென்னையின் பொற்காலம் என்று அழைக்கப்படுகிறது?

A) பிரான்சிஸ் டே B) தாமஸ் பிட் C) எலி யேல் D) வில்லியம் பிரபு

45) சென்னைக் கோட்டைக் கல்லூரி உருவான ஆண்டு?

A) 1840 B) 1837 C) 1812 D) 1900

46) வளர்தலம் - இலக்கணக்குறிப்பு தருக.

A) வினைத்தொகை B) பண்புத்தொகை C) உவமைத்தொகை D) உரிச்சொற்தொடர்

47) தெய்வமணிமாலை என்னும் பாமாலை இடம்பெற்ற இராமலிங்க அடிகளாரின் நூல்?

A) மனுமுறைகண்ட வாசகம் B) ஜீவகாருண்ய ஒழுக்கம்

C) பெரியபுராணம் D) திருவருட்பா

ETW ACADEMY

48) திருவருட்பா எத்தனை திருமுறைகளாகப் பகுக்கப்பட்டுள்ளது?

A) 4 B) 5 C) 6 D) 8

49) இராமலிங்க அடிகளாரின் உரைநடை நூல்கள் எவை?

A) ஞானரதம், தராசு

B) மனுமுறை கண்ட வாசகம், ஜீவகாருண்ய ஒழுக்கம்

C) சந்திரகிரிகையின் கதை, மாதர், கலைகள்

D) பதஞ்சலியோக சூத்திரம், ஹிந்து தருமம் (காந்தி உபதேசங்கள்)

50) "மலிவிழா வீதி மடநல்லார் மாமயிலைக் / கலிவிழாக் கண்டான் கபாலீச் சரம்அமர்ந்தான் / பலிவிழாப் பாடல்செய் பங்குனி உத்திரநாள் / ஒலிவிழாக் காணாதே போதியோ பூம்பாவாய்" என்ற தேவாரப் பாடலை இயற்றியவர்?

A) திருஞானசம்பந்தர் B) திருநாவுக்கரசர் C) சுந்தரர் D) மாணிக்கவாசகர்

51) பாடல்வைப்பு முறையில் பாடல் எண்ணிற்கு ஏற்பத் திணைகள் வரிசையாக வைத்துத் தொகுக்கப்பட்ட நூல் எது?

A) ஐங்குறுநூறு B) கலித்தொகை C) குறுந்தொகை D) அகநானூறு

52) "நெல்லின் நேரே வெண்கல் உப்பெனச் / சேரி விலைமாறு கூறலின் மனைய" எனப் பண்டமாற்றுமுறையைக் கூறும் அகநானூற்றுப் பாடலை இயற்றியவர்?

A) அம்மூவனார்

B) கீரந்தையார்

C) ஓரம்போகியார்

D) நல்லந்துவனார்

53) "வேட்டம்" என்பதன் பொருள்?

A) கடல் B) வலை C) மீன்பிடித்தல் D) கப்பல்

54) செறு - என்றால் என்ன?

A) உப்பங்கழி B) வயல் C) விலை D) சூரிய வெப்பம்

55) பொருந்தாப் பொருள் எது?

A) உமணர் - உப்பு வணிகர்

B) தெளிர்ப்ப - ஒலிப்ப

C) விளிஅறி - குரல் கேட்ட

D) வெரீஇய - மகிழ்ந்த

56) பொருந்தாப் பொருள் எது?

A) ஞமலி - பசு

B) மதர்கயல் – அழகியமீன்

C) புனவன் - கானவன்

D) அள்ளல் - சேறு

57) நித்திலக்கோவையில் அமைந்துள்ள பாடல்களின் எண்ணிக்கை?

A) 90 B) 100 C) 120 D) 80

58) நெய்தல் திணையைப் பாடுவதில் வல்லவர்?

A) ஓரம்போகியார் B) பேயனார் C) அம்மூவனார் D) கபிலர்

ETW ACADEMY

59) வட்டாரவழக்கு மொழிகளையும் அந்தந்த வட்டார வழக்கில் கதைகளை எழுதுபவர்களையும் பொருத்துக

அ) நெல்லைத்தமிழ் - 1) புதுமைப்பித்தன்

ஆ) கோவைத்தமிழ் - 2) சண்முகசுந்தரம்

இ) சென்னைத்தமிழ் - 3) ஜெயகாந்தன்

ஈ) தஞ்சைத்தமிழ் - 4) தி. ஜானகிராமன்

A) 4 3 2 1 B) 4 1 2 3 C) 2 1 4 3 D) 1 2 3 4

60) யானையின் வாய் மலைக்குகையின் வாயினைப் போல உள்ளதாகவும், உணவை எடுத்துச்செல்லும் துதிக்கை, மலைக்குகையில் நுழையும் பாம்பினைப் போல உள்ளதாகவும் வடிவத்தைக் காட்சிப்படுத்திய "யானைதன் வாய்நிறை கொண்ட வலிதேம்பு தடக்கை / குன்றுபுகு பாம்பின் தோன்றும்" - என்னும் பாடல் இடம்பெறும் நூல்?

A) நற்றிணை B) குறுந்தொகை C) ஐங்குறுநூறு D) அகநானூறு

61) உவமை ஒன்றையே அணியாகக் கூறியவர்?

A) அகத்தியர் B) தொல்காப்பியர் C) நாற்கவிராச நம்பி D) தண்டி

62) படிமச் சிந்தனை என்பது

1. நம்மிடம் இருந்ததே

2. மேலை நாட்டிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது

A) 1 சரி B) 2 சரி C) இரண்டும் சரி D) இரண்டும் தவறு

63) உலைக்களத்திலே நன்றாக வெந்து, பின் மெல்ல மெல்ல ஆறிக் கொண்டிருக்கும் பொன்னின் நிறம் போல், அந்தி வானம் விளங்கிய காட்சியை, "வெந்தாறு பொன்னின் அந்தி பூப்ப" - என்று கூறும் நூல்?

A) குறிஞ்சிப்பாட்டு B) முல்லைப்பாட்டு C) பட்டினப்பாலை D) அகநானூறு

64) **கூற்று:** உவமை உருவகம் போலப் படிமமும் வினை, பயன், மெய், உரு ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றும்

**காரணம்:** எவ்வகையான படிமமாக இருந்தாலும் அது காட்சி வழியே கருத்தினை விளக்குவதில்லை.

A) கூற்று சரி, காரணம் தவறு B) கூற்று தவறு, காரணம் சரி

C) கூற்றும் சரி, காரணமும் சரி D) கூற்றும் தவறு, காரணமும் தவறு

65) பொருந்தாத இணை எது?

A) ஒரு குட்டித்தீவின் வரைபடம் - தோப்பில் முகமது மீரான்

B) ஒரு பார்வையில் சென்னை நகரம் - அகிலன்

C) சென்னைப் பட்டிணம் - ராமச்சந்திர வைத்தியநாத்

D) இராமலிங்க அடிகள் வரலாறு - ஊரன் அடிகள்

66) "இருப்பதற்கென்றுதான் வருகிறோம் / இல்லாமல் போகிறோம்" என்ற புகழ்பெற்றக் கவிதையை இயற்றியவர் யார்?

A) பிரமிள் B) கலாப்ரியா C) நகுலன் D) ஆத்மநாம்

ETW ACADEMY

67) கவிஞர் நகுலனின் இயற்பெயர் என்ன?

A) சொ.விருதாச்சலம் B) அரவிந்தன் C) மதுசூதனன் D) டி.கே. துரைசாமி

68) தமிழரின் கலை, நாகரிகம், பண்பாடு முதலானவற்றை உள்ளடக்கிய கருவூலமாக திகழும் காப்பியம்?

A) சிலப்பதிகாரம் B) வளையாபதி C) சிந்தாமணி D) மணிமேகலை

69) சிலப்பதிகாரம், "குடிமக்கள் காப்பியம்" என அழைக்கப்படுவதன் காரணம்?

A) அரசகுடி மக்களை தலைமக்களாக வைத்துப் பாடியதால்

B) அரசகுடி அல்லாதவர்களை தலைமக்களாக வைத்துப் பாடியதால்

C) வணிகக்குடி மக்களை தலைமக்களாக வைத்துப் பாடியதால்

D) மேற்கண்ட அனைத்தும்

70) சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோவடிகளை, 'சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும்' என்று குறிப்பிடுபவர்?

A) பாரதியார் B) சுரதா C) இரா.பி.சேது D) பாரதிதாசன்

71) இளங்கோவடிகள் தன்னைப் பற்றிக் குறிப்பிடுகையில், 'செங்குட்டுவன் தம்பி' என்று எந்தக் காதையில் கூறுகிறார்?

A) மங்கல வாழ்த்துப் பாடல் B) வரந்தரு காதை

C) குன்றக் குரவை D) காட்சிக் காதை

72) "சொற்கேட்டார்க்குப் பொருள் கண் கூடாதல்" என்று கூறும் தொல்காப்பிய உரையாசிரியர்?

A) இளம்பூரணர் B) அரும்பத உரையாசிரியர்

C) பேராசிரியர் D) அடியார்கு நல்லார்

73) தொல்கப்பியம் நூல் முழுமைக்கும் உரை எழுதியவர்?

A) இளம்பூரணர் B) நச்சினார்கினியர் C) பேராசிரியர் D) சேனாவரையர்

74) "சிதம்பர ஸ்மரண" என்ற நூலை, "சிதம்பர நினைவுகள்" என்னும் தலைப்பில் தமிழில் மொழிபெயர்த்தவர்?

A) கே. வி. ஜெயஸ்ரீ B) கே.வி.சைலஜா C) யவனிகா ஸ்ரீராம் D) டாக்டர் ஸ்ரீராம்

75) காப்பியம் என்னும் சொல்லை, ______ எனப் பிரித்து மரபைக் காப்பது, இயம்புவது, வெளிப்படுத்துவது என்றும் மொழியைச் சிதையாது காப்பது என்றும் காரணம் கூறுவர்.

A) கா + இயம் B) காப்பு + இயம் C) காப்பி + அம் D) காப்பு + அம்

76) பொருந்தாதது எது?

A) காதை - சிலப்பதிகாரம், மணிமேகலை B) சருக்கம் - சூளாமணி, பாரதம்

C) இலம்பகம் - சீவக சிந்தாமணி D) படலம் - சிலப்பதிகாரம்

77) வடமொழியில் ‘காவ்யதரிசம்’ என்ற நூலைத் தழுவித் தமிழில் எழுதப்பட்ட அணியிலக்கண நூல்?

A) வெண்பா பாட்டியல் B) தண்டியலங்காரம்

C) வீரசோழியம் D) அமுதசாகரம்

ETW ACADEMY

78) பாரதிதாசன் இயற்றிய காப்பியங்கள்?

A) பாண்டியன் பரிசு, தமிழச்சியின் கத்தி
B) இருண்ட வீடு, எதிர்பாராத முத்தம்
C) சஞ்சீவி பர்வதத்தின் சாரல், வீரத்தாய், புரட்சிக்கவி
D) மேற்கண்ட அனைத்தும்

79) பராசக்தி மகா காவியத்தை இயற்றியவர்?

A) நாவலர் சோமசுந்தர பாரதியார்
B) மகாகவி சுப்ரமணிய பாரதியார்
C) கவியோகி சுத்தானந்த பாரதியார்
D) புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

80) தவறான இணையைத் தேர்க

A) விருத்தப்பா - நாலடியார்
B) ஆசிரியப்பா - அகநானூறு
C) கலிவெண்பா - தூது
D) குறள்வெண்பா - திருக்குறள்

81) வை.மு.கோதைநாயகி தம் சமகால எழுத்தாளர்களால் எவ்வாறு அழைக்கப்பட்டார்?

A) நாவல் ராணி
B) கதா மோகினி
C) ஏக அரசி
D) மேற்கண்ட அனைத்தும்

82) வை.மு.கோதைநாயகி அம்மையார் 35 ஆண்டுகள் தொடர்ந்து நடத்திய இதழ்?

A) பால பாரதம் B) ஜெகன் மோகினி C) சுதேச மித்திரன் D) பாலசுதா

83) எண்ணியவர் எவ்வாறு இருந்தால், அவர் எண்ணியவற்றை எண்ணியவாறே அடைவர் என்கிறார் வள்ளுவர்

A) மனவுறுதியுடையவராக
B) உடலுறுதியுடையவராக
C) கருவியுறுதியுடையவராக
D) காலம் கருதுபவராக

84) அகத்தில் உடன்பாடு இல்லாதவருடன் கூடி வாழும் வாழ்க்கை, ஒரு குடிசையில் எதனுடன் / யாருடன் வாழ்வது போன்றது என்கிறார் வள்ளுவர்?

A) முதலையோடு B) பாம்போடு C) குரங்கோடு D) யானையோடு

85) ஒருவருக்குத் துன்பம் பலவற்றையும் உண்டாக்கி அவருடைய புகழையும் கெடுக்கின்ற ______ போல வறுமை தருவது வேறொன்றும் இல்லை.

A) அறியாமை B) சூது C) சினம் D) அழுக்காறு

86) பின்வரும் நாலடியார் பாடலின் பொருளுக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிக.

"சீரியார் கேண்மை சிறந்த சிறப்பிற்றாய் / மாரிபோல் மாண்ட பயத்ததாம் - மாரி / வறந்தக்கால் போலுமே வாலருவி நாட! / சிறந்தக்கால் சீரியார் நட்பு"

A) பழையம் எனக்கருதிப் பண்பு அல்ல செய்யும் / கெழுதகைமை கேடு தரும்
B) எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை / அதிர வருவதோர் நோய்
C) நல்லினத்தின் ஊங்கும் துணையில்லை; தீயினத்தின் / அல்லல் படுப்பதூஉம் இல்
D) மேற்கண்ட எதுவுமில்லை

ETW ACADEMY

87) எளியது, அரியது எது?

A) தீயினத்தின் துணை - நல்லினத்தின் துணை

B) சொல்வது - சொல்லியபடி செய்வது

C) சிறுமை பல செய்வது - பகைவர் தொடர்பு

D) மெய்ப்பொருள் காண்பது - உருவுகண்டு எள்ளாதது

88) "இன்சொல் விளைநிலனா ஈதலே வித்தாக / வன்சொல் களைக்கட்டு வாய்மை எருவட்டி / அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈனஓர் / பைங்கூழ் சிறுகாலைச் செய்" என்றப் பாடல் இடம்பெறும் நூல்?

A) நாலடியார் B) நைடதம் C) நான்மணிக்கடிகை D) அறநெறிச்சாரம்

89) அரலை, அரி, அலை, அழுவம், அளம், அளக்கர், ஆர்கலி, ஆழி, ஈண்டுநீர், உவரி, திரை, பானல், பெருநீர், சுழி, நீராழி, புணர்ப்பு, தென்நீர், பௌவம், முந்நீர், வரி, ஓதம், வலயம் ஆகிய சொற்கள் எதைக் குறிக்கின்றன?

A) கடல் B) மலை C) நிலம் D) வானம்

90) குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்டது பற்றி 'நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்' என்று குறிப்பிடும் நூல்?

A) சிலப்பதிகாரம் B) வெற்றிவேட்கை C) பட்டினப்பாலை D) புறநானூறு

91) இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் யவனரை அரண்மனைத் தொழிலாளர்களாக்கிக் கட்டுப்படுத்தினான், பகை நாட்டுச் செல்வங்களைக் கொண்டு வந்து தன் நாட்டு மக்களுக்கு வழங்கினான் என்ற செய்திகள் பதிற்றுப்பத்தின் எந்தப் பத்தில் இடம்பெற்றுள்ளன?

A) ஐந்தாம் பத்து B) இரண்டாம் பத்து C) எட்டாம் பத்து D) நான்காம் பத்து

92) இலக்கியத்தில் மேலாண்மை என்ற நூலின் ஆசிரியர் யார்?

A) மேலாண்மை பொன்னுசாமி B) எம்.எஸ்.உதயமூர்த்தி

C) வெ. இறையன்பு D) உதயசந்திரன்

93) வெ.இறையன்பு அவர்களின் நூல் அல்லாதது எது?

A) ஐ.ஏ.எஸ் வெற்றிப் படிக்கட்டுகள் B) ஏழாவது அறிவு, உள்ளொளிப் பயணம்

C) எண்ணங்கள் D) மூளைக்குள் சுற்றுலா

94) கவிஞர் தமிழ்நதியின் இயற்பெயர் என்ன?

A) இராஜலட்சுமி B) கலைவாணி C) விஜயரங்கம் D) மதுசூதனன்

95) கவிஞர் தமிழ்நதியின் கவிதைத்தொகுப்புகளில் சேராதது?

A) நிலைபெற்ற சிலை B) சூரியன் தனித்தலையும் பகல்

C) இரவுகளில் பொழியும் துயரப்பனி D) அதன் பிறகும் எஞ்சும்

96) கவிஞர் தமிழ்நதி எழுதிய குறுநாவல்?

A) கோகிலா என்ன செய்தாள் B) கானல் வரி

C) கைவிலங்கு D) யாருக்காக அழுதான்

ETW ACADEMY

97) கவிஞர் தமிழ்நதியின் புதினங்களில் சேராதது?

A) ஈழம்: கைவிட்ட தேசம் B) பார்த்தீனியம்
C) கண்ணப்பன் கிளிகள் D) மேற்கண்ட எதுவுமில்லை

98) பொருந்தாப் பொருள் எது?

A) காய் நெல் - விளைந்த நெல் B) செறு - வளம்
C) தமித்து - தனித்து D) புக்கு - புகுந்து

99) காய்நெல் - இலக்கணக்குறிப்பு தருக

A) வினைத்தொகை B) பண்புத்தொகை C) உவமைத்தொகை D) உம்மைத்தொகை

100) "தமிழ்ப்பற்று முன்னோர்வழியாக எனக்குக் கிடைத்த சீதனம்." என்றவர் யார்?

A) மயிலை சீனி. வேங்கடசாமி B) நாவலர் சோமசுந்தர பாரதியார்
C) வ.சு.ப.மாணிக்கம் D) மா.இராசமாணிக்கனார்

101) மயிலை சீனி.வேங்கடசாமியை "கிறித்துவமும் தமிழும்" என்ற நூலை எழுத ஆர்வமூட்டியது?

A) விபுலானந்த அடிகள் உரை B) திரு.வி.க உரை
C) ச. த. சற்குணர் உரை D) கா. சுப்பிரமணியர் உரை

102) எந்தெந்த பல்லவ மன்னர்களைப் பற்றி ஆய்வு செய்து மயிலை சீனி.வேங்கடசாமி நூல்களை எழுதியுள்ளார்?

A) மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன், நந்திவர்மன்
B) மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன், இராஜசிம்மன்
C) சிம்மவிஷ்ணு, இராஜசிம்மன், நந்திவர்மன்
D) சிம்மவிஷ்ணு, மகேந்திரவர்மன், ராஜசிம்மன்

103) களப்பிரர் காலத்தை அனைவரும் இருண்டகாலம் என்று சொல்லிவந்த நிலையில், களப்பிரர் பற்றி முழுமையாக ஆய்ந்து, அவர்களின் காலம் பற்றிய புதிய கண்ணோட்டத்தை மயிலை சீனி.வேங்கடசாமி, எந்நூலின் மூலம் வெளிப்படுத்தினார்?

A) ஒளிரும் களப்பிரர் காலம் B) களப்பிரர் ஆட்சியில் தமிழகம்
C) களப்பிரர் ஆண்ட காலம் D) களப்பிரர்கால உண்மை நிலை

104) "ஐந்தடிக்கு உட்பட்ட குறள் வடிவம்; அகன்ற நெற்றி; வட்ட முகம்; எடுப்பான மூக்கு; பேசத் துடிக்கும் மெல்லுதடுகள்;..." என மயிலை சீனி. வேங்கடசாமி பற்றி உருவ விவரிப்பு செய்தவர்?

A) அழ. வள்ளியப்பா B) நாரண. துரைக்கண்ணன் C) பாரதிதாசன் D) வல்லிக்கண்ணன்

105) தமிழக வரலாற்றை பல கோணங்களில் மீட்டுருவாக்கம் செய்தவர் வேங்கடசாமி. அவரின் மீட்டுருவாக்க முயற்சிக்குச் சரியான சான்றாக அமைந்த நூல்?

A) இந்திய வரலாறு B) தமிழர் வரலாறு
C) தமிழக வரலாறு D) தமிழின் தொன்மை

ETW ACADEMY

106) மயிலை சீனி வேங்கடசாமி, தமிழையும் எந்த திராவிட மொழியையும் ஒப்பிட்டு ஆராய்ந்துள்ளார்?

A) கோத்தா B) தோடா C) மால்தோ D) துளு

107) வேங்கடசாமி அவர்களின் அரிய ஆவணப்பணிகளில் ஒன்றாக வைத்துப் போற்றப்படும் "மறைந்துபோன தமிழ்நூல்கள்" என்ற நூலில், மரைந்துபோன எத்தனை நூல்கள் தொடர்பான குறிப்புகளை நம் முன் நிறுத்துகிறார்?

A) 333 B) 555 C) 222 D) 444

108) செந்தமிழ் செல்வி என்ற இதழில் மயிலை சீனி.வேங்கடசாமி எழுதிய சொல்லாய்வுக் கட்டுரைகள் எப்பெயரில் தொகுப்பாக வெளியிடப்பட்டது?

A) வானம் வசப்படும் B) தமிழ்ச் சொல்லாராய்ச்சி

C) அஞ்சிறைத் தும்பி D) தம்ழிச் சொல்வளம்

109) வேங்கடசாமி, ஆண்டில் இளைஞராக இருந்தாலும் ஆராய்ச்சித் துறையில் முதியவர்; நல்லொழுக்கம் வாய்ந்தவர். நல்லோருடைய கூட்டுறவைப் பொன்னேபோல் போற்றுபவர்" என்று புகழாரம் சூட்டியவர்?

A) சுவாமி வைகுண்டர் B) சுவாமி விபுலானந்த அடிகள்

C) சுவாமி இராமலிங்க அடிகளார் D) சுவாமி குன்றக்குடி அடிகளார்

110) வேங்கடசாமிக்கு 1962இல் பாராட்டுக் கேடையம் வழங்கிய அமைப்பு?

A) தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சித்துறை B) புலம்பெயர் எழுத்தாளர் சங்கம்

C) தமிழ் எழுத்தாளர் சங்கம் D) முற்போக்கு எழுத்தாளர் சங்கம்

111) வல்லிய - என்ற சொல்லின் பொருள் என்ன?

A) தீய B) இகழ்ச்சி C) நல்ல D) உறுதியான

112) ஓர்மின் என்றால் என்ன?

A) ஆராய்தல் B) கூடுதல் C) தனித்து செல்லுதல் D) இரைச்சல்

113) பொருந்தாப் பொருள் எது?

A) பாதகர் - நடப்பவர் B) குழுமி - ஒன்றுகூடி

C) பழிப்புரை - இகழ்ச்சியுரை D) ஏதமில் - குற்றமில்லாத

114) இலக்கணக்குறிப்புகளில் பொருந்தா இணை எது?

A) கருந்தடம், வெங்குருதி - பண்புத்தொகைகள் B) வெந்து, சினந்து, போந்து - வினையெச்சங்கள்

C) உன்னலிர் - முன்னிலைப் பன்மை வினைமுற்று D) ஓர்மின் - வியங்கோள் பன்மை வினைமுற்று

115) _____ என்பவர் ஆகிலத்தில் எழுதிய பில்கிரிம்ஸ் புரோகிரஸ் எனும் ஆங்கில நூலின் தழுவலாக இரட்சணிய யாத்திரிகம் படைக்கப்பட்டது.

A) சர் எட்வின் அர்னால்டு

B) கான்ஸ்டடைன் ஜோசப் பெஸ்கி

C) கால்டுவெல்

D) ஜான் பன்யன்

ETW ACADEMY

116) இரட்சணிய யாத்திரிகம் எத்தனைப் பாடல்களைக் கொண்ட ஒரு பெரும் உருவகக் காப்பியம் ஆகும்?

A) 3766 B) 2766 C) 4766 D) 5766

117) இரட்சணிய யாத்திரிகம் எத்தனை பருவங்களைக் கொண்டது?

A) 3 B) 5 C) 6 D) 10

118) இந்திய அகழ்வாய்வுத்துறை வரலாற்றில் பெரும் திருப்புமுனையை ஏற்படுத்திய "கற்கோடரி" எங்கு கண்டுபிடிக்கப்பட்டது?

A) குடியம் B) கிண்டி C) பல்லாவரம் D) அத்திரம்பாக்கம்

119) சென்னையின் ஒரு பகுதியாக விளங்கும் மயிலாப்பூரை, 'மல்லியர்பா' என்று குறிப்பிட்ட கி.பி. 2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புவியியலாளர் யார்?

A) கெப்ளர் B) தாலமி C) வேர்ல்பூல் D) கோயபெல்ஸ்

120) பல்லாவரத்திலுள்ள பல்லவர் குடைவரை யாருடைய காலத்தில் அமைக்கப்பட்டது?

A) மூன்றாம் நந்திவர்மன் B) நரசிம்மவர்மன்
C) முதலாம் மகேந்திரவர்மன் D) சிம்மவிஷ்ணு

121) மயிலை சீனி. வேங்கடசாமி, ப. ஜீவானந்தம், உள்ளிட்ட நண்பர்களுடன் பக்கிங்காம் கால்வாயில் படகுப் பயணம் செய்ததை, "மாவலிபுரச் செலவு" என்றத் தலைப்பில், "சென்னையிலே ஒருவாய்க்கால் புதுச் / சேரி நகர் வரை நீளும் / அன்னதில் தோணிகள் ஓடும்..." எனக் கவிதை வடித்தவர் யார்?

A) பாரதியார் B) பாரதிதாசன்
C) கவிமணி D) நாமக்கல் கவிஞர்

122) ஆங்கிலேயரின் நிதி உதவியின்றி இந்தியர் ஒருவரால் சென்னையில் உருவாக்கப்பட்ட முதல் கல்வி நிறுவனம்?

A) எத்திராஜ் கல்லூரி B) காயிதே மில்லத் கல்லூரி
C) பச்சையப்பன் கல்லூரி D) ஹிந்துஸ்தான் கல்லூரி

123) இந்தியாவின் முதல் பொது நூலகம்?

A) சென்னை ஜார்ஜ் கோட்டை நூலகம் B) கன்னிமாரா நூலகம்
C) திருவனந்தபுரம் நூலகம் D) கீழ்த்திசை சுவடிகள் நூலகம்

124) 1856 இல் தென்னிந்தியாவின் முதல் தொடர்வண்டி நிலையம் அமைந்த இடம்?

A) தாம்பரம் B) மாம்பலம் C) இராயபுரம் D) எழும்பூர்

125) மலரடி - இலக்கணக்குறிப்பு தருக.

A) வினைத்தொகை B) பண்புத்தொகை C) உவமைத்தொகை D) உரிச்சொற்தொடர்

126) இளம்பெண்கள் ஆராவாரத்தோடு கொண்டாடும் திருவிழாக்கள் நிறைந்த வீதிகளையுடை பெரிய ஊர் எதுவென "பூம்பாவையிடம்" ஞானசம்பந்தர் கூறுகிறார்?

A) அடையாறு B) கிண்டி C) மயிலாப்பூர் D) சைதை

ETW ACADEMY

127) பொருந்தாப் பொருள் எது?

A) மலிவிழா - விழாக்கள் நிறைந்த

B) கலிவிழா - எழுச்சி தரும் விழா

C) பலிவிழா - பலிகொடுத்து, சமையல் செய்து பூசையிடும் உத்திர விழா

D) ஒலிவிழா - ஆரவார விழா

128) சம்பந்தரின் "திருமயிலாப்பூர் பதிகம்" இடம்பெற்ற தேவாரத் திருமுறை?

A) ஒன்றாம் திருமுறை B) இரண்டாம் திருமுறை

C) மூன்றாம் திருமுறை D) நான்காம் திருமுறை

129) பன்னிரு திருமுறைகளில் முதல் எத்தனைத் திருமுறைகளை ஞானசம்பந்தர் இயற்றியுள்ளார்?

A) ஒன்று B) இரண்டு C) மூன்று D) எட்டு

130) தேவாரப் பாடல்களைத் தொகுத்தவர்?

A) நம்பியாண்டார் நம்பி B) நாதமுனிகள்

C) பிள்ளைபெருமாள் அய்யங்கார் D) திருஞானசம்பந்தர்

131) "பகடு" என்றால் என்ன?

A) பசு B) எருது C) குதிரை D) நாய்

132) உழாஅது - இலக்கணக்குறிப்பு தருக.

A) இன்னிசை அளபெடை B) சொல்லிசை அளபெடை

C) செய்யுளிசை அளபெடை D) இசைநிறை அளபெடை

133) எட்டுத்தொகைநூலில் ஒன்றான அகநானூறு 3 பிரிவுகளை உடையது. அவற்றுள் சேராதது?

A) களிற்றியானைநிரை B) மணிமிடைப் பவளம்

C) நித்திலக்கோவை D) சுந்தரக்கலம்பகம்

134) 1997இல் சாகித்ய அகாதெமி விருதுபெற்ற தோப்பில் முகம்மது மீரானின் புதினம்?

A) துறைமுகம் B) ஒரு குட்டித்தீவின் வரைபடம்

C) கூனன் தோப்பு D) சாய்வு நாற்காலி

135) தோப்பில் முகமது மீரானின் தமிழக அரசின் விருதுபெற்ற படைப்புகள் எவை?

1. ஒரு குட்டித் தீவின் வரைபடம்

2. துறைமுகம்

3. கூனன் தோப்பு

A) 1 & 2 B) 1 & 3 C) 2 & 3 D) 1, 2 & 3

136) படிமம் என்பதன் பொருள்?

A) காட்சி B) தெளிவு

C) கற்பனை D) வடிவம்

137) எருமையின் சுரணையற்ற தன்மையைப் பாறையின் ஒப்பீட்டால் பின்வருமாறு படிமப்படுத்துபவர் யார்?
"வெயில் மழைக்குச் / சொரணையற்ற எருமை / குத்திட்ட பாறையாய் / நதி நீரில் கிடக்கும்"

A) கலாப்ரியா
B) கல்யாண்ஜி
C) தேவதேவன்
D) ஆற்றூர் ரவிவர்மா

138) நகுலன் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் எந்தெந்த பாடங்களில் முதுகலைப் பட்டம் பெற்றார்?

A) தமிழ் & ஆங்கிலம்
B) தமிழ் & மலையாளம்
C) தமிழ் & சமஸ்கிருதம்
D) மேற்கண்ட அனைத்தும்

139) நகுலனுடைய கவிதைகள் எந்தெந்த சிறு சிறு தொகுதிகளாக வந்துள்ளன?

A) மூன்று, ஐந்து
B) கண்ணாடியாகும் கண்கள், நாய்கள்
C) வாக்குமூலம், சுருதி
D) மேற்கண்ட அனைத்தும்

140) நகுலன் எழுதிய புதினங்களின் எண்ணிக்கை?

A) 2
B) 7
C) 5
D) 9

141) நகுலன், யாருடைய கவிதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்?

A) பாரதியார்
B) ஞானகூத்தன்
C) பிச்சமூர்த்தி
D) பாரதிதாசன்

142) *குழல்வழி நின்றது யாழே, யாழ்வழித் / தண்ணுமை நின்றது தகவே , தண்ணுமைப் / பின்வழி நின்றது முழவே, முழவொடு / கூடி நின்று இசைத்தது ஆமந்திரிகை" என்றப் பாடல் இடம்பெறும் காப்பியம்?

A) சிலப்பதிகாரம்
B) மணிமேகலை
C) சீவக சிந்தாமணி
D) வளையாபதி

143) பொருந்தாப் பொருள் எது?

A) கழை - மூங்கில்
B) விரல் - மகளிர்க் கைப் பெருவிரல்
C) உத்தரப் பலகை - மேல் இடும் பலகை
D) கண் - கணு

144) பொருந்தாப் பொருள் எது?

A) பூதர் - ஐம்பூதங்கள்
B) ஓவிய விதானம் - ஓவியம் தீட்டப்பட்ட பந்தல்
C) நித்திலம் - சங்கு
D) விருந்து - புதுமை

145) பொருந்தாப் பொருள் எது?

A) மண்ணிய - கழுவிய
B) நாவலம்பொலம் - சாம்பூநதம் என்னும் உயர்ந்த வகைப் பொன்
C) தலைக்கோல் - நாடகக் கணிகையர் பெறும் பட்டம்
D) அரசு உவா - பட்டத்துக் குதிரை

146) கழஞ்சு என்பது?

A) ஒருவகை உணவு
B) ஒருவகை இசை
C) ஒருவகை எடை அளவு
D) ஒருவகை வாகனம்

ETW ACADEMY

147) மாதவி, ஐந்து ஆண்டுகள் ஆடல் கற்பதற்கான சடங்குகளை செய்து, எத்தனை ஆண்டுகள் வரை ஆடல் கலையைப் பயின்றாள்? தனது எத்தனையாவது வயதில் ஆடலை அரங்கேற்ற விரும்பினாள்?

A) 3, 15 B) 5, 12 C) 8, 15 D) 7, 12

148) தொல்நெறி - இலக்கணக்குறிப்பு தருக

A) வினைத்தொகை B) உவமைத்தொகை
C) பண்புத்தொகை D) வினையாலனையும் பெயர்

149) பொருந்தாப் பொருள் எது?

A) நகை - சிரிப்பு B) இளிவரல் - சிறுமை
C) மருட்கை - அச்சம் D) பெருமிதம் - பெருமை

150) பாடிய பாணனின் குரலை தலைவி எள்ளி நகையாடிய "ஈட்டுபுகழ் நந்தி பாணநீ! எங்கையர்தம் / வீட்டிருந்து பாட விடிவளவும் - காட்டிலழும் / பேயென்றாள் அன்னை, பிறர் நரியென்றார், தோழி / நாயென்றாள், நீ என்றேன் நான்!" என்ற பாடல் இடம்பெறும் நூல்?

A) முட்தொள்ளாயிரம் B) தமிழ் விடு தூது C) மூவருலா D) நந்திக்கலம்பகம்

151) சிறையில் தண்ணீர் கேட்டு, காலம் தாழ்த்தித் கொடுத்ததால் அதை அருந்தாமல் தவிர்த்துத் தனக்கேற்பட்ட சிறுமையை எண்ணிப் பாடியவன்?

A) பொற்கை பாண்டியன் B) சேரன் கணைக்காலிரும்பொறை
C) மூன்றாம் நந்திவர்மன் D) கோப்பெருஞ்சோழன்

152) பெருவீரன் ஒருவன் தனியாகப் பெரும்படையை எதிர்க்கும் பெருமிதத்தைக் குறிப்பிடும், "உறுசுடர் வாளோடு ஒருகால் விலங்கின் / சிறுசுடர் முற்பேர் இருளாங் கண்டாய்..." என்றப் பாடல் இடம்பெறும் நூல்?

A) பரிபாடல் B) புறநானூறு
C) பதிற்றுப்பத்து D) புறப்பொருள் வெண்பா மாலை

153) தொல்காப்பியரைத் தமிழ்ச்சான்றோர் எவ்வாறு போற்றுகின்றனர்?

A) பொய்யாப்பெரும்புகழ் தொல்காப்பியன் B) மாறாப்பெரும்புகழ் தொல்காப்பியன்
C) ஒன்னாப்பெரும்புகழ் தொல்காப்பியம் D) ஒல்காப்பெரும்புகழ்த் தொல்காப்பியன்

154) ஐம்பெருங்காப்பியங்களும் சிறப்பு வாய்ந்தவையே எனினும், பெருங்காப்பியத்திற்குரிய நான்குவகை உறுதிப் பொருள்களும் பிற உறுப்புகளும் முழுமையாக அமையப்பெற்று விளங்கும் காப்பியம் எதுவென்பர்?

A) சிலப்பதிகாரம் B) மணிமேகலை C) சீவக சிந்தாமணி D) வளையாபதி

155) அறியா - இலக்கணக்குறிப்பு தருக

A) எதிர்மறை வினையெச்சம் B) எதிர்மறை தொழிற்பெயர்
C) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் D) எதிர்மறை வினைமுற்று

ETW ACADEMY

156) புறநானூற்றை, 1894ஆம் ஆண்டு முதன்முதலில் அச்சில் பதிப்பித்தவர் யார்?

A) உ.வே.சாமிநாதர் B) நச்சினார்க்கினியர் C) சி.வை.தாமோதரனார் D) அயோத்திதாசர்

157) புறநானூறு முழுவதையும், 1999ஆம் ஆண்டு, "The Four Hundred Songs of War and Wisdom : An Anthology of Poems from Classical Tamil, the Purananuru" என்றத் தலைப்பில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த, கலிஃபோர்னியா பல்கலைக் கழக தமிழ்ப் பேராசிரியர் யார்?

A) ஜி.யு.போப் B) ஜார்ஜ்.எல்.ஹார்ட் C) வில்லியம் ஹென்றி D) தாமஸ் ரோ

158) பிசிராந்தையார் எவ்விதத்தில் உயர்நிலையில் இருந்தார்?

A) அரசனுக்கு அறிவுரை சொல்லக்கூடிய B) மந்திரிகளுக்கு அறிவுரை சொல்லக்கூடிய
C) மந்திரிகளுக்கு ஆசி கூறக்கூடிய D) அனைத்து கல்வி, கேள்விகளுக்கும் அதிபதியாக

159) தமிழகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட சங்ககாலக் கல்வெட்டுகள் அசோகர் காலத்திய பிராம்மி வரிவடிவத்திலிருந்து முரண்படுவதாக தன்னுடைய ஆய்வு நூலான 'எர்லி தமிழ் எபிகிராபி' யில் தெளிவுபடுத்துபவர்?

A) ஐராவதம் மகாதேவன் B) நாகசாமி
C) பாலகிருஷ்னன் ஐ.ஏ.எஸ் D) உதயச்சந்திரன்

160) தமிழ்நாட்டிலுள்ள பிராம்மிக் கல்வெட்டுகளின் ஆராய்ச்சிக்கு அடிகோலியவர் யார்?

A) ஐராவதம் மகாதேவன் B) நாகசாமி
C) கே.வி.சுப்ரமணியனார் D) பாலச்சந்திரன் ஐ.ஏ.எஸ்.

161) தனது ஆய்வுகளுக்காக ஐராவதம் மகாதேவன் பெற்ற விருதுகளில் சேராதது?

A) ஜெவகர்லால் நேரு ஆய்வறிஞர் விருது (1970)
B) இந்திய வரலாற்று ஆராய்ச்சி மைய விருது (1992)
C) தாமரைத்திரு விருது (2009)
D) தாமரையணி விருது (2012)

162) "கிழித்த கோட்டைத் தாண்ட மாட்டான்" என்பது யார் கோடு கிழித்த நிகழ்விலிருந்து உருவான மரபுத் தொடராகும்?

A) சுக்ரீவன் B) இலக்குவன் C) இராமன் D) வாலி

163) பொருந்தாதது எது?

A) தருமன் - அறம் B) பீமன் - தூக்கம்
C) மனுநீதிச் சோழன் - நீதி D) கர்ணன் - வள்ளல் தன்மை

164) தொன்மங்களைக் கொண்டு அரவான் என்ற நாடகத்தை எழுதியவர் யார்?

A) எஸ்.ராமகிருஷ்ணன் B) புதுமைப்பித்தன்
C) ஜே.டி.குரூஸ் D) சு.வெங்கடேசன்

ETW ACADEMY

165) “தொன்மை தானே சொல்லுங் காலை / உரையொடு புணர்ந்த பழமை மேற்றே” என்ற நூற்பா இடம்பெறும் இலக்கண நூல்?

A) நன்னூல் B) தொல்காப்பியம் C) வீரசோழியம் D) யாப்பெருங்கலக்காரியை

166) ‘பலர் துஞ்சவும் தாம் துஞ்சான்’ - விழித்திருந்தவரும் அவரைப் பாடியவரும்

A) சோழன் நெடுங்கிள்ளியை, பாணர் B) சோழன் நலங்கிள்ளியை, கோவூர்கிழார்

C) கணைக்கால் இரும்பொறையை, கபிலர் D) கரிகாலனை, உருத்திரங்கண்ணனார்

167) சிந்துவெளி நாகரிகம் பற்றித் தமிழில் முதன்முதலில் ‘மொஹெஞ்சொ-தரோ அல்லது சிந்துவெளி நாகரிகம்’ என்ற நூலை இயற்றியவர் யார்?

A) மா.இராசமாணிக்கனார் B) வ.சு.ப.மாணிக்கம்

C) மயிலை.சீனி.வேங்கடாசலம் D) நாவலர் சோமசுந்தர பாரதியார்

168) மா.இராசமானிக்கனாரின் நூல்கள் தமிழக அரசால் நாட்டுடைமையாக்கப்பட்ட ஆண்டு?

A) 2006 - 2007 B) 1996 - 1997 C) 2002 - 2003 D) 2004 - 2005

169) கிறித்துவக் கம்பர் எனப் போற்றப்படுபவர்?

A) வீராமாமுனிவர் B) கால்டுவெல் C) எச். ஏ. கிருட்டிணனார் D) ஜி.யு.போப்

170) வலிமை வாய்ந்த ஆவியர் குலத்தில் தோன்றியவன்; பெரிய மலை நாட்டுக்கு உரியவன்; வலிமையும் பெருந்தன்மையும் நற்பண்பும் கொண்டவன்; பொதினி மலைக்குத் தலைவன் என நல்லூர் நத்தத்தனார் யாரைப் பாடுகிறார்?

A) பாரி B) காரி C) ஓரி D) பேகன்

171) வெள்ளிய அருவிகளைக் கொண்ட பறம்புமலையின் தலைவனென நல்லூர் நத்தத்தனார் யாரைப் பாடுகிறார்?

A) அதியன் B) பாரி C) நலங்கிள்ளி D) ஆய்

172) வில் ஏந்தியவன்; சந்தனம் பூசி உலர்ந்த தோள்களை உடையவன்; ஆர்வத்துடன் இனிமையான மொழிகளைப் பேசுபவன் என நல்லூர் நத்தத்தனார் யாரைப் பாடுகிறார்?

A) அதியமான் B) நலங்கிள்ளி C) நள்ளி D) ஆய்

173) காலந்தவறாமல் பெய்யும் மழை போன்றவன்; போர்த்தொழிலில் வல்லமையுடையவன்; மழைக்காற்று எப்போதும் இருக்கக்கூடிய உயர்ந்த மலை நாட்டை உடையவன் என நல்லூர் நத்தத்தனார் யாரைப் பாடுகிறார்?

A) நள்ளி B) பேகன் C) பாரி D) ஆய்

174) பொருந்தா இணை எது?

A) அதியமான் - ஓய்மா நாடு; இன்றைய திண்டிவனம்

B) நள்ளி - நெடுங்கோடு மலை முகடு; இன்றைய ஊட்டி

C) வல்வில் ஓரி - கொல்லி மலை

D) மேற்கண்ட எதுவுமில்லை

ETW ACADEMY

175) முல்லைக் கொடி படரத் தேர் தந்த பாரியின் செயலும், மயிலுக்குத் தன் ஆடையைத் தந்த பேகனின் செயலும் அறியாமையால் செய்யப்பட்டவையல்ல. இஃது அவர்களின் ஈகை உணர்வின் காரணமாகச் செய்யப்பட்டதேயாகும். 'அறிமடமும் சான்றோர்க்கு அணி' என்று கூறும் நூல்?

A) பழமொழி நானூறு B) நாலடியார்
C) நான்மணிக்கடிகை D) திணைமாலை நூற்றைமது

176) இலக்கணக்குறிப்புகளை பொருத்துக

அ) கவாஅன் - 1) செய்யுளிசை அளபெடை
ஆ) தடக்கை - 2) உரிச்சொல் தொடர்
இ) நீலம் - 3) ஆகுபெயர்
ஈ) கடல்தானை - 4) உவமைத்தொகை
உ) மலைதல் - 5) தொழிற்பெயர்

A) 1 2 3 4 5 B) 2 3 4 5 1 C) 3 4 5 1 2 D) 4 5 1 2 3

177) அருந்திறல், நெடுவழி, வெள்ளருவி, நெடுவேல், நன்மொழி, நன்னாடு - ஆகிய சொற்களின் இலக்கணக் குறிப்பு தருக

A) வினைத்தொகைகள் B) உவமைத்தொகைகள் C) பண்புத்தொகைகள் D) உம்மைத்தொகைகள்

178) சாந்தா தத், ____ என்ற மொழிபெயர்ப்பு இதழின் ஆசிரியர் குழுவில் உள்ளார்

A) திசை பத்தும் B) திசை எட்டும் C) திசை நான்கும் D) திசை எங்கும்

179) சாந்தா தத்தின் கதைகளில் வெளிப்படும் அடிப்படைப் பன்பு?

A) அங்கதம் B) குரோதம் C) சமுதாயக் கோபம் D) மனிதநேயம்

180) தமிழைப் பொறுத்தவரை, யார் காலம் முதல் குறியீட்டிய பயன்பாட்டை அறிய முடிகிறது?

A) தொல்காப்பியர் B) நன்னூலார் C) அமுதசாகரர் D) அகத்தியர்

181) சங்க இலக்கியத்தில், அகத்திணை மாந்தர்களின் உள்ளத்து உணர்வுகளைக் குறிப்பாக உணர்த்தும் குறியீடுகள், ____ என்ற முதிர்ந்த குறிப்புப் பொருள் உத்தியில் இடம்பெற்றுள்ளன.

A) இறைச்சி B) உள்ளுறை உவமம் C) உவமை D) உருவகம்

182) கடையெழு வள்ளல்களின் வரிசையைச் சாராத மன்னர்கள்

A) ஆய் அண்டிரனும் அதியனும் B) நல்லியக்கோடனும் குமணனும்
C) நள்ளியும் ஓரியும் D) பாரியும் காரியும்

183) தமிழின் சிறப்புகளைப் பற்றி ஆய்வுகள் பல செய்தமையால் 'தமிழ் இமயம்' என்று தமிழ் அறிஞர்களால் போற்றப்பட்டவர்

A) வ.சு.ப. மாணிக்கம்
B) மா. இராசமாணிக்கனார்
C) சி.மணி
D) சோமசுந்தர பாரதியார்

ETW ACADEMY

184) 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்ற கொள்கையைப் பறைசாற்றுவதற்காகத் 'தமிழ்வழிக் கல்வி இயக்கம்' என்ற அமைப்பை நிறுவித் தமிழ்ச்சுற்றுலா மேற்கொண்டவர்.

A) மா. இராசமாணிக்கனார் B) வ.சு.ப. மாணிக்கம்

C) சோமசுந்தர பாரதியார் D) சி.மணி

185) "அலைநீர்த் தாழை அன்னம் பூப்பவும் / தலைநாள் செருந்தி தமனியம் மருட்டவும் / கடுஞ்சூல் முண்டகம் கதிர்மணி கழாஅலவும் / நெடுங்கால் புன்னை நித்திலம் வைப்பவும்" என்று நல்லியக்கோடன் ஆட்சி செய்த ஓய்மா நாட்டின்கண் உள்ள எயிற்பட்டினத்தின் அழகைக் காட்சிப்படுத்தும் பாடல் இடம்பெறும் நூல் எது?

A) திருமுருகாற்றுப்படை B) சிறுபாணாற்றுப்படை

C) பெரும்பாணாற்றுப்படை D) பொருணராற்றுப்படை

186) உவமை, உருவகம் போலப் படிமமும் எதன் அடிப்படையில் தோன்றும் என்பர்?

A) வினை, பயன் B) மெய் (வடிவம்)

C) உரு (நிறம்) D) மேற்கண்ட அனைத்தும்

187) "என்னிடம் இரண்டு சரக்குக் கப்பலோடு மூன்றாவதாக ஒரு தமிழ்க் கப்பலும் உள்ளது" என்று வ.உ.சி பெருமிதத்துடன் யாரைக் குறிப்பிட்டார்?

A) சுப்பிரமணிய சிவா B) பாரதியார்

C) சோமசுந்தர பாரதியார் D) பாண்டித்துரையார்

188) நாவலர் சோமசுந்தர பாரதியார் இயற்றிய நூல் அல்லாதது எது?

A) தசரதன் குறையும் கைகேயி நிறையும் B) திருவள்ளுவர்

C) சேரர் தாயமுறை, தமிழும் தமிழரும் D) விநாயகர் நான்மணிமாலை

189) "பிறப்பினால் எவர்க்கும் - உலகில் பெருமை வாராதப்பா! / சிறப்பு வேண்டுமெனில் – நல்ல செய்கை வேண்டுமப்பா! / நன்மை செய்பவரே – உலகம் நாடும் மேற்குலத்தார்! / தின்மை செய்பவரே – அண்டித் தீண்ட ஒண்ணாதார்!" என்றப் பாடலை இயற்றியவர்?

A) சோமசுந்தர பாரதியார் B) அழ வள்ளியப்பா

C) கவிமணி தேசிக விநாயகனார் D) நாமக்கல் கவிஞர்

190) "பிறனில் விழைவோர் கிளையொடுங் கெடுப" என்பது எந்தக் காப்பியத்தின் பாவிகம்.ஆகும்?

A) சிலப்பதிகாரம் B) கம்பராமாயணம் C) மணிமேகலை D) வில்லிபாரதம்

191) இந்நூல்,

1. அணிகளின் இலக்கணத்தைக் கூறும் நூல்களுள் முதன்மையானது
2. முத்தகம், குளகம், தொகைநிலை, தொடர்நிலை ஆகிய செய்யுள் வகைகளைக் கூறுகிறது.

A) தொல்காப்பியம் B) நன்னூல்

C) தண்டியலங்காரம் D) அமுதசாகரம்

ETW ACADEMY

192) சொல்தொடர்நிலையில் அமைந்தவை?

A) அந்தாதி இலக்கியங்கள் B) தூது இலக்கியங்கள்

C) உலா இலக்கியங்கள் D) கலம்பக இலக்கியங்கள்

193) விருத்தம் என்னும் ஒரேவகைச் செய்யுளில் அமைந்தவை?

A) மணிமேகலை, கம்பராமாயணம் B) கம்பராமாயணம், வில்லிபாரதம்

C) சீவக சிந்தாமணி, கம்பராமாயணம் D) சிலப்பதிகாரம், மணிமேகலை

194) அழிவு வராமல் காக்கும் கருவிமட்டுமல்ல, பகைவரால் அழிக்க முடியாத பாதுகாப்பு அரணும் எதுவே ஆகும் என்கிறார் வள்ளுவர்?

A) அறிவு B) அறம் C) அன்பு D) அடக்கம்

195) யாருக்கு அவர் நடுங்கும்படியாக வரக்கூடிய துன்பம் ஒன்றும் இல்லை என்கிறார் வள்ளுவர்?

A) எதையும் எதிராபாரா நண்பர்கள் சூழ வாழுபவருக்கு

B) மன்னனின் அன்பை உடையவருக்கு

C) பின்பு வரப்போவதை முன்பே அறிந்து காத்துக்கொள்ளும் வல்லமைகொண்ட அறிவுடையவர்க்கு

D) மேற்கண்ட அனைத்தும்

196) மற்ற எல்லாவற்றையும்விட, நல்ல செயல்பாட்டிற்கு எதுவே வேண்டும் என்கிறார் வள்ளுவர்?

A) செய்து முடிக்கும் செயல்திட்பம் B) வினை செய்யும் கருவிகள்

C) மன உறுதி D) மேற்கண்ட அனைத்தும்

197) சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம் / ______ ______ ______

A) சொல்லா வண்ணம் செயல் B) சொல்லிய செயல் முடிவு

C) சொல்லா செயல் முடிவு D) சொல்லிய வண்ணம் செயல்

198) அல்லல் படுப்பதூஉம் இல் - எவரோடு பழகினால்?

A) வாள்போல் பகைவர் B) மெய்ப்பொருள் காண்பவர்

C) எண்ணியாங்கு எய்துபவர் D) தீயினத்தார்

199) பொருத்துக

அ) பாம்போடு உடன் உறைந்தற்று - 1) தீக்காய்வார்

ஆ) செத்தார் - 2) சீர் அழிக்கும் சூது

இ) வறுமை தருவது - 3) கள் உண்பவர்

ஈ) இகல்வேந்தர் சேர்ந்து ஒழுகுவார் - 4) உடம்பாடு இலாதவர்

A) 1, 2, 3, 4 B) 2, 3, 4, 1 C) 4, 1, 3, 2 D) 4, 3, 2, 1

200) நடுங்கும்படியான துன்பம் யாருக்கில்லை?

A) வரப்போவதை முன்னரே அறிந்து காத்துக் கொள்ள கூடியவர் B) மனத்திட்பம் உடையவர்

C) அரசரைச் சார்ந்து வாழ்கின்றவர் D) சூதாடுமிடத்தில் காலம் கழிப்பவர்

***

© ETW Academy